# History of India from 1206 to 1707 A.D.

# Unit – I

## Contents

1. Slave Dynasty –Qutb–ud–din Aibak ........................................................................ 2

2. Iltutmish-Razia.................................................................................................... 3

3. Balban ............................................................................................................... 6

4. Ala-ud-din Khilji.................................................................................................. 7

## 1. Slave Dynasty –Qutb–ud–din Aibak

**அடிமை வம்சம்:**

இந்தியாவின்மீது முஸ்லிம்கள் நடத்திய படையெடுப்புகளின் விளைவாக டெல்லி சுல்தானியம் நிறுவப்பட்டது. அது கி.பி. 1206 முதல் 1526 ஆம் ஆண்டுவரை நீடித்தது. ஐந்து வெவ்வேறு வம்சங்கள் அடிமை, கில்ஜி, துக்ளக், சையது, லோடி ஆகியன டெல்லி சுல்தானியத்தை ஆட்சி செய்தன. வட இந்தியா முழுவதையும் கைப்பற்றியதோடு நிற்காமல், அவர்கள் தக்காணத்திலும் தென்னிந்தியாவிலும் நுழைந்தனர். இந்தியாவில் அவர்களது ஆட்சி, சமூகம், ஆட்சித் துறை மற்றும் பண்பாட்டு நிலைமைகளில் பெருத்த மாற்றங்களை ஏற்படுத்தின.

அடிமை வம்சம் மாம்லுக் வம்சம் என்றும் அழைக்கப்படுகிறது. மாம்லுக் வம்சம் என்ற குர்ஆன் சொல்லுக்கு அடிமை என்று பொருள். கி.பி. 1206 முதல் 1290 ஆம் ஆண்டுவரை அடிமை வம்சம் டெல்லியில் ஆட்சிபுரிந்தது. இக்காலத்தில் மூன்று மரபுகள் ஏற்படுத்தப்பட்டன. அவை

1. குத்புதீன் ஐபக் நிறுவிய குத்பி மரபு (1206 - 1211).
2. இல்துத்மிஷ் நிறுவிய முதல் இல்பாரி மரபு (1211 - 1266)
3. பால்பன் நிறுவிய இரண்டாவது இல்பாரி மரபு (1266 - 1290)

**குத்புதீன் ஐபக் (1206 – 1210)**

குத்புதீன் லாகூரைத் தலைநகராகக் கொண்டு தனது ஆட்சியைத் தொடங்கினார். பின்னர் தனது தலைநகரை டெல்லிக்கு மாற்றினார். டெல்லியில் ஆட்சிபுரிந்தவரை செயல்திறன் மிக்கவராகச் செயல்பட்டுப் பல புதிய பகுதிகளைக் கைப்பற்றினார். கலகங்களை ஒடுக்கினார். மத்திய மற்றும் மேற்கு சிந்து - கங்கைச் சமவெளிப் பகுதிகளுக்குத் (வடஇந்தியா) தானே தலைமையேற்றுப் படைநடத்திச்சென்று பலபகுதிகளைக் கைப்பற்றினார். கீழை கங்கைச் சமவெளியைக் பீகார், வங்காளம்) கைப்பற்றும் பொறுப்பைப் பக்தியார் கல்ஜி என்பாரிடம் ஒப்படைத்தார். ஐபக் டெல்லியில் குவ்வத்-உல்- இஸ்லாம் மஸ்ஜித் எனும் மசூதியைக் கட்டினார். அதுவே இந்தியாவிலுள்ள மிகப் பழமையான மசூதி எனக் கருதப்படுகிறது. குதுப்மினாருக்கு அவரே அடிக்கல் நாட்டினார். ஆனால் அவரால் அப்பணிகளை முடிக்க இயலாமல் போயிற்று. அவருடைய மருமகனும் அவருக்குப் பின் ஆட்சிப் பொறுப்பேற்றவருமான இல்துமிஷ் குதுப்மினாரைக்கட்டி முடித்தார். போலோ விளையாட்டின்போது குதிரையிலிருந்து தவறி விழுந்ததில் படுகாயமடைந்த ஐபக் 1210-இல் இயற்கை எய்தினார்.

அடிமை வம்சம் - குத்புதின் ஐபக் கி.பி. 1206 முதல் 1290 வரை இந்தியாவை ஆட்சி செய்த முஸ்லீம் ஆட்சியாளர்கள், அடிமைகளாகவோ (அ) அடிமைகளின் வாரிசுகளாகவோ இருந்தனர். எனவே அவர்களை அடிமை வம்சம் என்கின்றனர். அவ்வம்சத்தின் முதல் ஆட்சியாளரே குத்புதீன் ஐபக்.

குத்புதீனின் இளமைப் பருவம்: துருக்கியப் பெற்றோர்களுக்குப் பிறந்த சிறுவனாக இருந்த போதே நிஷாபூரில் ஒரு காஜிக்கு விற்கப்பட்டார். காஜியின் மகன்கள், அவரை முகமது கோரியிடம் விற்றனர். அவர் தன் விசுவாசத்தாலும் வீரத்தாலும் படைத்தலைவர் ஆனார்.

இரண்டாம் தரைன் போருக்குப் பின்னர், இந்தியாவில் தான் வென்ற பகுதிகளை குத்புதீனின் பொறுப்பில் முகமது கோரி விட்டர். 1192 முதல் 1202க்குள் மீரட், டெல்லி, அன்கில்வாட், பதௌன், சந்தவார், கன்னோசி, கஜீராஹோ முதலிய பகுதிகளை குத்புதீன் கைப்பற்றினார்.

**சுல்தானாக குத்புதீன்:** ஆண் குழந்தை இல்லாத முகமது கோரி, 1206 -ல் குத்புதீனுக்கு "மாலிக்" என்ற பட்டம் அளித்தார். மார்ச் 1206ல் முகமது கோரி இறந்ததும். குத்புதீனைத் தம் தலைவராகும்படி லாகூர் மக்கள் வேண்டினர். அதை ஏற்ற அவர், 1206-ஜீன், 24-ஆம் நாளன்று சுல்தானாக முடி சூட்டிக் கொண்டார். தன் மகளை இல்துத்மிஷீக்கும் தங்கையை நசீருத்தீன் சூபாச்சாவிற்கும் மணம் செய்து கொடுத்தார். தாஜீதீன் இல்தூஸின் மகளை அவர் மணந்தார். இவற்றால் தன் நிலையை அவர் வலுப்படுத்திக் கொண்டார்.

நான்கு ஆண்டுகள் (1206-10) மட்டுமே சுல்தானாக குத்புதீன் இருந்தார். அந்தக் காலம் முழுவதும் வடமேற்குப் பிரதேசத்தின் விவகாரங்களிலும் வங்காளத்தின் சிக்கல்களிலும் அவர் மூழ்கியிருந்தார். எனவே புதிய படையெடுப்புகளை மேற்கொள்ளவோ, தன் ஆட்சியை நிலை நிறுத்தவோ அவரால் முடியவில்லை. குதிரை மீதமர்ந்து சௌகான் (Polo போன்ற விளையாட்டு) விளையாடி போது கீழே விழுந்ததில் ஏற்பட்ட காயத்தால் நவம்பர் -1210ல் குத்புதீன் ஐபக் இறந்தார்.

குத்புதீன் ஐபக்கிடம், துருக்கியருக்குரிய அஞ்சா நெஞ்சமும் பாரசீகர்க்குரிய தாராள குணமும் இருந்தன. அவரது தயாள குணம் லாக் பக்ஷா என்ற பட்டத்தை அவருக்கு பெற்றுத் தந்தது. கட்டிடக் கலையில் நாட்டம் கொண்டிருந்த அவர், டெல்லியில் குவ்வத்துல் இஸ்லாம் மசூதியையும் அஜ்மீரில் ஒரு மசூதியையும் கட்டினார். இஸ்லாமிய ஞானி குவாஜா குத்புதீன் பக்தியார் காகியின் நினைவாக 1199-ல் அவர் கட்டத் தொடங்கிய ஸ்தூபி 1220-ல் இல்துத்மிஷ்-ஆல் கட்டி முடிக்கப்பட்டு குதுப்மினார் எனப்பட்டது.

முஸ்லீம்களின் தொழுகைக்கு அழைப்பதற்காகக் கட்டப்பட்ட அது, பின்னர் வெற்றி கோபுரமாக மாற்றப்பட்டதாம். நான்காவது மாடியை மின்னல் தாக்கி சேதப்படுத்தியதால், நான்காவது மாடியை இடித்துவிட்டு இரண்டு சிறிய மாடிகளை ஃபெரோஸ் துக்ளக் கட்டினார். இதனால் குதுப்மினாரின் உயரம் 240 அடி ஆயற்று. அடிமை வம்ச சுல்தான்களின் கட்டிடக் கலையைப் பறைசாற்றும் சிறந்த சான்று குதுப்மினார்.

## 2. Iltutmish-Razia

### இல்துத்மிஷ்

சம்சுதீன் இல்துமிஷ் (1211-1236) துருக்கிய இனத்தைச் சார்ந்த குத்புதீன் ஐபக்கின் அடிமை. இல்துமிஷ்-இன் மேல்தட்டு அடிமைகள் பலரும் துருக்கிய, மங்கோலிய வழித்தோன்றல்கள். அவர்களை புக்கார, சாமர்கண்ட், பாக்தாத் போன்ற வணிக மையங்களிலிருந்து வணிகர்கள் தில்லிக்கு அழைத்துவந்தனர். எனினும் இவர்கள் அனைவருக்குமே துருக்கியப் பட்டங்களை சம்சுதீன் இல்துமிஷ், கொடுத்தார். தனது மேல்தட்டு இராணுவ அடிமைகளையே (பண்டகன்) அவர் நம்பியிருந்தார். தொலைவிலுள்ள இடங்களில் அவர்களையே ஆளுநர்களாகவும் தளபதிகளாகவும் நியமிக்கிற வழக்கத்தை யும் கைக்கொண்டார். இக்காலகட்டத்தில் மங்கோலிய இனத்தைச் சேர்ந்த அனுபவமிக்க

இராணுவத் தளபதிகள் வட இந்தியாவுக்குள் குடிபெயர்ந்தபோ திலும், பழைய வழக்கத்தை இல்துமிஷ் மாற்றிக்கொள்ள வில்லை.

குத்புதீனின் அடிமையும் மருமகனுமான சம்சுதீன் இல்துமிஷ், குத்புதீன் ஐபக்கின் மகன் ஆரம் ஷா ஆட்சிக்கு வருவதைத் தடுத்து, தானே தில்லியின் ஆட்சிக்கட்டிலில் அமர்ந்தார். தனது ஆட்சிக் காலத்தில் அவர் குவாலியர், ரான்தம்பூர், அஜ்மீர், ஜலோர் ஆகிய இடங்களில் ராஜபுத்திரர்களுக்கிடையே நிலவிய குழப்பங்களை முடித்துவைத்தார். லாகூரிலும் முல்தா னிலும் நசுருதீன் குபச்சாவின் படையை எதிர்த்து வெற்றிபெற்றார். வங்க ஆளுநர் அலிவர்தனின் சதியையும் முறியடித்தார். மங்கோலிய செங்கிஸ்கானுக்கும் மத்திய ஆசியாவின் கவாரிஸ்மிஷா ஜலாலுதீனுக்கும் இடையே போர்ப்பகை இருந்தது. இல்துமிஷிடம் ஜலாலுதீன் ஆதரவு கேட்டார். இல்துமிஷ், அவரை ஆதரிக்க மறுத்துவிட்டார். ஜலாலுதீனை அவர், ஆதரித்திருந்தால் இந்திய வரலாறு பெரிதும் மாறி இருந்திருக்கும்; மங்கோலியர்கள் இந்தியாவை எளிதில் நாசம் செய்திருப்பார்கள். இல்துமிஷ்-இன் ஆட்சி, தில்லியில் 243 அடி உயரமுள்ள குதுப்மினார் என்ற ஒரு வெற்றித்தூணைக் கட்டிமுடித்ததற்கும் சுல்தான்கள் ஆட்சி காலத்தின் இரண்டு அடிப்படை நாணயங்களான செப்பு, வெள்ளி தங்காவை அறிமுகம் செய்ததற்கும் குறிப்பிடத்தகுந்தது.

அடிமை வம்ச மரபுகள் பலவீனமானவை என்பதால், இல்துமிஷ் இறந்த பிறகு அவரது வாரிசுகள் ஆட்சிக்கு வருவது எளிதாக இல்லை. ஒரு பத்து ஆண்டுகளுக்குள், ஒரு மகன், ஒரு மகள் (சுல்தானா இரஸியா), மற்றொரு மகன், ஒரு பேரன் எனப் பலரும் ஆட்சிக்கு வந்தனர்; இறுதியில் அவரது கடைசி மகன் சுல்தா ன் இரண்டாம் நசிர் அல்லுதீன் முகமது (1246-66) அரசரானார். இல்துமிஷின் வாரிசுகள் தங்கள் தந்தை யாரால் நியமிக்கப்பட்ட தளபதிகளையும் ஆளுநர்களையும் எதிர்த்து போரிட்டுத் தோற்றனர். மூத்த பிரபுக்களாகிய அவர்கள் தொடர்ந்து தில்லி அரசியலில் தலையிட்டனர். இல்துமிஷ் வாரிசுகளுக்கு நிபந்தனைகள் விதித்து வந்தனர். மூத்த அரச குடும்ப அடிமைகளுக்கு மாற்றாக இளைய தலைமுறையினரை சுல்தான் நியமித்தபோது, அவர்களுக்கு முன்னே அதிகாரம் செலுத்தியவர்களுக்கு நிகரான வலிமையான ஒன்றுபட்ட சுல்தானிய அரசு பற்றி அரசருக்கிருந்த கண்ணோட்டத்தை அவர்கள் பெற்றிருக்கவில்லை.

கிழக்கே லக்னோவதி (நவீன வங்கம்), மேற்கே பஞ்சாப், சிந்து மாகாணங்களில் நியமிக்கப்பட்ட அடிமை ஆளுநர்கள் தில்லியின் கட்டுப்பாட்டிலிருந்து வெளியேறி சுதந்திர அரசுகளாக அறிவித்தனர். தில்லி சுல்தானின் 'மைய ஆட்சிப் பகுதிகளிலிருந்த' (தில்லி மற்றும் அதனைச் சுற்றியிருந்த பகுதிகள்) அடிமை ஆளுநர்களும், தங்களை நிலைப்படுத்திக் கொண்டும் பக்கத்திலுள்ள குறுநிலத் தலைவர்களுடன் அணி சேர்ந்தும் சுல்தானுக்குக் கட்டுப்பட மறுத்தனர். ஷம்ஸியின் அடிமைகளுக்கும் அடுத்தடுத்துவந்த தில்லி சுல்தான்களுக்கும் இடையில் இருபதாண்டுகளுக்கு மோதல்கள் நிகழ்ந்தன. அதன் பிறகு 1254இல், வடமேற்கில் ஷிவாலிக் ஆட்சிப் பகுதிகளின் தளபதியாக இருந்த உலுக்கான், தில்லியைக் கைப்பற்றினார். உலுக்கான், இல்துமிஷ் ஆட்சியின்போது அடிமையாகவும் இளைஞராகவும் இருந்தவர். அவர் (சுல்தானுக்குத் துணையாக இருந்த) ஆட்சி அதிகாரப்

பிரதிநிதி என்று பொருள்படும், ந'யிப்-இ முல்க் என்று பட்டம் சூட்டிக்கொண்டார். பிறகு 1266இல் சுல்தான் கியாஸ்-உத்-தின் பால்பனாக தில்லி ஆட்சியைக் கைப்பற்றினார்.

**ரஸியா சுல்தான் (1236 - 1240)**

ரஸியா பேகம் கி.பி. 1236–1240 வரை டெல்லியை ஆண்ட ஒரு பெண் சுல்தான். (சுல்தான் என்பது ஆண்பால், சுல்தானா என்பதுதான் பெண்பால். நான் ஒரு ஆணுக்கு வீரத்திலும் விவேக்கதிலும் எந்த விதத்திலும் குறைந்தவள் இல்லை – என்னை சுல்தான் என்றே அழையுங்கள் என்று எல்லோருக்கும் ஆணையிட்டு இருந்தாள் ரஸியா பேகம்.) இவர் இந்தியாவின் முதல் அரசி என்று அழைக்கப்படுகிறார். இவரது தந்தை பெயர் ஷம்ஸ்-வுட்-டின் அல்டமிஸ். இவர் டெல்லியை ஆண்ட மூன்றாவது சுல்தான் ஆவார். இவர் டெல்லியை கி.பி. 1211 முதல் 1236 வரை ஆட்சி செய்தார். இவருக்கு பல மகள்களும் மகன்களும் இருந்தனர். ஆனால் இவர் ரஸியா பேகத்தையே மிக அதிகமாக நேசித்தார். ஒரு பெண் கற்றுக் கொள்ள வேண்டிய அனைத்து விஷயங்களையும் அவளுக்குக் கற்றுக் கொடுத்தார். இவர் ஒரு இளவரசியாகவே வளர்க்கப்பட்டார். கூடவே அரசியல் விவகாரங்களையும் நன்கு பழகிக் கொண்டார்.

குதிரை சவாரியிலும், வாள் வித்தையிலும் தனது சகோதரர்களையும் விட மிகச் சிறந்து விளங்கினார். அச்சமயத்தில் இவரது தந்தை ராஜபுத்திரர்களுக்கெதிராக படையெடுத்துச் சென்றார். தான் திரும்பி வர கால தாமதம் ஆகலாம் என கருதிய அவர் தனக்கு பதிலாக தனது மகள் ரஸியா பேகத்தை ஆட்சி அதிகாரத்தில் நியமித்தார். அல்டமிஸ் திரும்பி வர சுமார் ஆறு ஆண்டுகள் ஆனது. அக்கால கட்டத்தில் ரஸியா பேகம் நன்முறையில் விவேகத்துடனும் ஆட்சிப் புரிந்தார்.

இல்துத்மிஷ் தனது புதல்வி ரசியாவை அரியணைக்கு வாரிசாக நியமித்திருந்தார். ஆனால் டெல்லியின் காஸி மற்றும் வாசிர் இருவரும் ருக்னுதுதீன் பிரோஸ் என்பவரை அரியணையில் அமர்த்தினர். முல்தானில் நடைபெற்ற கலகத்தை ஒடுக்குவதற்கு ருக்னுதீன் சென்றார். அத்தருணத்தை பயன்படுத்திக் கொண்ட ரசியா டெல்லியின் அமீர்கள் ஆதரவோடு அரியணையைக் கைப்பற்றிக் கொண்டார். அபிசீனிய அடிமையான யாகூத் என்பவரை குதிரைப் படைத் தலைவனாகவும் நியமித்தார். ஆணுடை தரித்து அரசவையில் ரசியா அமர்ந்தார். வேட்டைக்குச் செல்வது படைநடத்துவது உள்ளிட்ட செயல்களிலும் ரசியா ஈடுபட்டார். இதனைக் கண்டு துருக்கிய உயர்குடியினர் வெகுண்டனர். 1240 ஆம் ஆண்டு அல்தூனியா என்ற படிண்டாவின் ஆளுநர் ரசியாவுக்கெதிராக கிளர்ச்சியிலீடுபட்டார். ரசியா தானே படைநடத்திச் சென்று கிளர்ச்சியை நசுக்க முற்பட்டார். ஆனால் அல்தூனியா யாகூத்தைக் கொன்று ரசியாவை சிறைப்படுத்தினார். இதற்கிடையில் துருக்கிய உயர்குடிரினர் இல்துத்மிஷின் மற்றொரு மகனான பஹ்ரம் என்பவரை அரியணையில் அமர்த்தினர். சிறையிலிருந்த ரசியா அல்தூனியாவின் அன்பைப் பெற்று அவரது துணையோடு டெல்லி நோக்கி சென்றார். ஆனால், ரசியா தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டார்.

ரசியாவின் வீழ்ச்சி நாற்பதின்மர் குழுவின் எழுச்சிக்கு வழிவகுத்தது. அடுத்த ஆறு ஆண்டுகள் பஹ்ரம் மற்றும் மசூத் இருவரும் டெல்லியை ஆண்டனர். சுல்தான்களுக்கும் உயர்குடியினருக்குமிடையே பூசல்கள் தோன்றின. 1246ல் பால்பன் இல்துத்மிஷின் இளைய மகனான நசிருதீன் முகமதுவை சுல்தானாக நியமித்தார்.

# 3. Balban

**பால்பன் (1266-1287)**

பால்பன் அரசரானதும் தில்லி சுல்தானியத்தில் குழப்பங்கள் விளைவித்த பிரபுக்களின் அரசியல் சூழ்ச்சிகள் முடிவுக்குவந்தன. பால்பன், தனது ஆட்சி அதிகாரத்தை உறுதிப்படுத்திக்கொள்ள, அடங்கமறுத்த ஆளுநர்கள் மீதும் அவர்களின் உள்ளூர் கூட்டாளிகள் மீதும் தாக்குதல் தொடுத்தார். தில்லியைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தோவாபிலும் நிகழ்ந்த பால்பனின் தாக்குதல்களை பரணி குறிப்பிடுகிறார். இந்தத் தாக்குதல்களின்போது காடுகள் அழிக்கப்பட்டன; புதிய சாலைகள் அமைக்கப்பட்டன; காடுகள் அழிக்கப்பட்ட புதிய நிலங்கள், புதிதாகப் படையில் சேர்ந்த ஆஃப்கானியர்களுக்கும் மற்றவர்களுக்கும் குத்தகையில்லா நிலங்களாக (மஃப்ருஸி) வழங்கப்பட்டு, அவை பயிரிடப்பட்டன. வணிகத் தடங்களையும் கிராமச் சந்தைகளையும் பாதுகாக்கப் புதிய கோட்டைகள் கட்டப்பட்டன.

**பால்பனும் சட்ட ஒழுங்கும்**

கங்கை, யமுனை நதிகள் இடையிலான தோவாப் பகுதிகளில் சட்டஒழுங்கு நிலைமை சீர்குலைந்தது. ராஜபுத்திர ஜமீன்தார்கள் கோட்டைகள் அமைத்தனர்; சுல்தானின் ஆணைகளை மீறினர். வடமேற்கில், மேவாரைச் சுற்றிய அடர்ந்த காட்டுப் பகுதிகளில் வாழ்ந்த ‘மியோ’ என்ற ஓர் இஸ்லாமியச் சமூகம் கொலையிலும் கொள்ளையிலும் ஈடுபட்டிருந்தது. இதை ஒரு சவாலாக ஏற்ற பால்பன் தாமே முன்னின்று மேவாரைச் சேர்ந்தவர்கள் மீது தாக்குதல் தொடுத்தார். அவரின் படை வீரர்கள், மியோக்களைத் தேடிப்பிடித்துக் கொன்ற னர். தோவாப் பகுதியில் ராஜபுத்திர அரண்கள் அழிக்கப்பட்டன; காடுகள் அழிக்கப்பட்டன. சாலைகளைப் பாதுகாக்கவும் கலகங்களைக் கையாளவும் அப்பகுதி முழுவதிலும் ஆஃப்கன் படை வீரர்கள் குடியமர்த்தப்பட்டனர்.

**துக்ரில் கானை தண்டிக்கின்ற தாக்குதல்**

பால்பன், கலகங்களை ஈவிரக்கமின்றி ஒடுக்கினார். தனக்குப் பிடித்த ஓர் அடிமையான துக்ரில் கானை வங்கத்தின் ஆளுநராக நியமித்தார். ஆனால், விரைவிலேயே துக்ரில் கான் வெளிப்படையாகவே கலகம் செய்தார். அதை ஒடுக்குவதற்கு, பால்பன் அனுப்பிவைத்த அவத் ஆளுநர் அமின் கான், பணிந்து பின்வாங்கினார். இதனால் ஆத்திரமடைந்த பால்பன் மேலும் இரு படைப் பிரிவுகளை அனுப்ப அவையும் தோல்வியைத் தழுவின. அடுத்தடுத்து ஏற்பட்ட இந்தப் பின்னடைவுகளால் அவமானப்பட்ட பால்பன், தாமே வங்கத்திற்குச் சென்றார். பால்பன் நெருங்கிவிட்டதைக் கேள்வியுற்ற துக்ரில் கான் தப்பியோடினார். பால்பன், அவரைப் பின் தொடர்ந்து முதலில் லக்நௌதிக்கும் பிறகு திரிபுராவை நோக்கியும் சென்றார். அங்கே துக்ரில் கானைப் பிடித்த பால்பனின் படைவீரர்கள் அவரைக் கொன்றனர். பிறகு வங்கத்தின் ஆளுநராக பால்பனின் மகன் புக்ரா கான் நியமிக்கப்பட்டார். பால்பன் இறந்த பிறகு புக்ரா கான் ஒரு சுதந்திர அரசாட்சியாகப் பிரிந்து போனாரேயன்றி தந்தையின் அரியணையைக் கோரவில்லை. இதனால் தில்லியில் ஒரு தலைமை நெருக்கடி ஏற்பட்டது; மேலும், அவரது மகன் கைகுபாத், சிற்றின்பத்தில் வீழ்ந்து கிடந்தார்.

### மங்கோலிய அச்சுறுத்தலுக்கு எதிரான நடவடிக்கைகள்

மங்கோலியர்களின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் விதமாக தனது ராணுவத்தை பால்பன் பலப்பருத்திக் கொண்டார். படிண்டா, சுனம், சாமானா ஆகிய இடங்களில் இருந்த கோட்டைகளில் கூருதல் படைகளை நிலைநிறுத்தி வலுப்பருத்தினார். அதே நேரத்தில், ஈரானின் மங்கோலிய பொறுப்பு ஆளுநரும் செங்கிஸ் கானின் பேரனுமான ஹுலுக் கானுடன் நல்லுறவைப் பேணுவதற்கு அவர் முயற்சி செய்தார். சட்லைஜுக்கு அப்பால் முன்னேறி வரமாட்டோம் என்ற வாக்குறுதியை மங்கோலியரிடமிருந்து பால்பன் பெற்றார். இதை, 1259இல் தில்லிக்கு ஒரு நல்லெண்ணக் குழுவை அனுப்பிவைத்து உலுக்கான் குறிப்பால் உணர்த்தினார். மங்கோலியத் தாக்குதல்களிலிருந்து எல்லைப் பகுதிகளைக் காப்பதற்காக தனது விருப்பத்துக்குரிய மகன் முகமது கானுக்கு முல்தானின் ஆளுநர் பொறுப்பு அளித்திருந்தார் பால்பன். உலுக்கானுடன் நட்புறவு இருந்தபோதிலும் ஒரு மங்கோலியரோடு ஏற்பட்ட ஒரு மோதலில் முகமது கான் கொல்லப்பட்டார். இதனால் மனமுடைந்த பால்பன், 1286இல் இறந்து போனார்.

## 4. Ala-ud-din Khilji

### அலாவுதீன் கில்ஜி (1296-1316):

அலாவுதின் கில்ஜி பால்பன் இறந்ததும் கைகோபாத் (1287-1290) என்பவர் டெல்லி சுல்தான் ஆனார். அவரைக் கொலை செய்துவிட்டு ஜலாலுதீன் ஃபெரோஸ் கில்ஜி என்ற பெயரில் மலீக் ஃபெரோஸ் என்பவர் டெல்லி சுல்தான் ஆனார். 70 வயதான ஜலாலுதீன் கில்ஜி 1290 முதல் 1296 வரை டெல்லி சுல்தானாக இருந்தார். அவரைக் கொன்று விட்டு அக்டோபர் 1296-ல், அவரது மருமகனான அலாவுதீன் கில்ஜி டெல்லி சுல்தான் ஆனார்.

கி.பி. 1316 வரை (இருபது ஆண்டுகள்) ஆட்சி செய்த அவர், இந்தியா முழுவதையும் சுல்தானியத்தின் கீழ் கொண்டு வந்தார். தன் தளபதில்கள் (குறிப்பாக மாலிக் காபூர்) மூலம் தென்னிந்தியாவை வென்ற முதல் ஆட்சியாளர் இவரே. பல சீர்திருத்தங்களையும் கொண்டு வந்தார். இவற்றால்தான் "இரத்த வெறி பிடித்த இரக்கமற்ற கொடுங்கோலராக இருந்தாலும், அவர் சக்தி வாய்ந்த திறமையான ஆட்சியாளர் என்பதை யாரும் மறுக்க முடியாது" என்கிறார் லேன்பூல், அலாவுதீன் கில்ஜியின் வட, தென்னிந்திய படையெடுப்புகள், மங்கோலியருடன் போர், இராணுவ, பொருளாதாரச் சீர்திருத்தங்கள், அங்காடிக் கட்டுப்பாடுகள் ஆகியன பற்றிக் காண்போம்.

### வட இந்தியப் படையெடுப்புகள்

அலெக்சாண்டரின் இராணுவ வெற்றிகளைப் பொன்ற வெற்றிகள் பெற்று, இந்தியாவின் சிறந்த அரசர் என்று பெயர் பெற விரும்பினார். அலாவுதீன் கில்ஜி. தமது வட, தென்னிந்தியப் படையெடுப்புகளில் வெற்றி பெற்ற அவரை இரண்டாம் அலெக்சாண்டர் என சிலர் குறிப்பிடுகின்றனர்.

**குஜராத் (கி.பி. 1297):** குஜராத்தை கைப்பற்ற தன் தளபதிகள் உலுக் கான் மற்றும் நஸ்ரத் கானை கி.பி. 1297-ல் அனுப்பினார் அலாவுதீன். சுல்தானியப் படைகளைக் கண்ட

குஜராத் அரசர் ராஜா காரான், தேவகிரிக்கு தப்பி ஓடினார். சுல்தானியப் படையிடம் பிடிபட்ட அவரது மனைவி ராணி கமலாதேவி, அலாவுதீனின் அபிமான ராணியானார் குஜராத் முழுவதுமாக கொள்ளையடிக்கப்பட்டது. அலாவுதீனின் சிறந்த தளபதியாக உருவான மாலிக் காபூர், இங்கிருந்துதான் அடிமையாக நஸ்ரத் கானால் வாங்கப்பட்டார்.

**ராந்தாம்பூர் (கி.பி. 1299-1301):** ராந்தாம்பூரை ராணா ஹமீர் தேவ் ஆண்டு வந்தார். இதன் மீதும் படையெடுக்க உலுக்கானும் நஸ்ரத் கானும் அனுப்பப்பட்டனர். முற்றுகையின் போது நஸ்ரத்கான் கொல்லப்பட்டார். உலுக்கான விரட்டியடிக்கப்பட்டார். சுல்தானியப் படைகளின் தோல்வியை அறிந்த அலாவுதீன் கில்ஜி, தானே போர்க்களம் புகுந்தார். ஹமீர்தேவ் வலிமையாக அலாவுதீனை எதிர்த்தார். போரில் வெல்ல முடியாத, அரணை, ராணாவின் தளபதி ராணா மால்-ஐ கைக்குள் போட்டு, கி.பி. 1301-ல் பிடித்தார் அலாவுதீன். ஹமீர் தேவும், பிற இராஜ புத்திரரும் போரில் உயிரிழந்தனர். நயவஞ்சக தளபதி ராணா மால் கொல்லப்பட்டார். ராந்தாம்பூரின் ஆட்சிப் பொறுப்பை உலுக்கானிடம் ஒப்படைத்துவிட்டு டில்லி திரும்பினார் அலாவுதீன்.

**மேவார் (கி.பி. 1303):** அலாவுதீனின் அடுத்த தாக்குதலுக்கு இலக்கான மேவாரை ராணா ரத்தன்சிங் ஆண்டுவந்தார். பெரும் படையுடன் கி.பி. 1303-ல் மேவார் மீது அலாவுதீன் படையெடுத்தார். நீண்ட முற்றுகைக்குப் பின் மேவாரின் சித்தூர் கோட்டை வீழ்ந்தது. 30,000க்கும் மேற்பட்ட இராஜபுத்திரர்கள் உயிரிழந்தனர். ராணாவின் மனைவி ராணி பத்மினி உட்பட பல இராஜபுத்திரப் பெண்கள், ஜௌகார் முறைப்படி தீயில் பாய்ந்து உயிர்விட்டனர். ராணி பத்மினியை அடைவதற்காகவே மேவார் மீது அலாவுதின் படையெடுத்தார்.

**மாளவம்:** மாளவத்தை கைப்பற்ற முல்தான் ஆளுநர் ஜனுல் மூல்க் தலைமையில் ஒரு படையை கி.பி. 1305-ல் அலாவுதீன் அனுப்பினார். மாளவ அரசர் தோற்கடிக்கப்பட்டு, மாளவத்தின் ஆளுநராக்கப்பட்டார் ஜனுல் முல்க். 1308-ல் மார்வாரின் கோட்டை சிவானவும் ஜேலர்-ம் கைப்பற்றப்பட்டன. பின்னர் மாண்டு, உஜ்ஜயினி, தார், சந்தேரி ஆகிய இராஜபுத்திர நகரங்களும் அலாவுதீனிடம் வீழ்ந்தன.

**தென்னிந்திய படையெடுப்புகள்**

பெரும் செல்வத்தைப் பெறவும் பல இடங்களைக் கைப்பற்றவும் தன் படைகளுக்கு வேலை தரவும் தென்னிந்தியா மீது அலாவுதீன் கில்ஜி படையெடுத்தார் எனப்படுகிறது. கி.பி. 1305 வாக்கில் வட இந்தியா முழுவதையும் வெற்றி கொண்டு விட்ட அலாவுதீன், பின்னர் தென்னிந்தியா மீது தன் பார்வையை செலுத்தினார்.

**தேவகிரி (கி.பி. 1307-08):** சுல்தான் ஜலாலுதீன் கில்ஜி காலத்திலேயே யாதவ அரசான தேவகிரி மீது அலாவுதீன் படையெடுத்தார். அவரிடம் தோல்வி கண்ட தேவகிரி அரசர் இராமச்சந்திர தேவ், கப்பம் செலுத்துவதாக ஒப்புக் கொண்டார். ஆனால் அவர் முறையாக கப்பம் செலுத்தவில்லை. எனவே கப்பத்திற்காகவும், குஜராத்திலிருந்து தப்பி ஓடிவந்து தேவகிரியில் தங்கியிருக்கும் தேவலதேவி (குஜராத் அரசர் ராஜாகாரனின் மகள் டில்லிக்கு கொண்டு செல்லவும் தேவகிரி மீது படையெடுக்குமாறு மாலிக் காபூரை அலாவுதீன் கில்ஜி பணித்தார்.

(குஜராத்தில் நஸ்ரத் கான்-ஆல் 1000 தினார்களுக்கு வாங்கப்பட்ட இந்து அடிமை, டெல்லிக்குக் கொண்டு வரப்பட்டு மாலிக் கபூர் என்று பெயரிடப்பட்டார். அலாவுதீன் கில்ஜியின் வசீர் ஆசி, பின்னர் தளபதி ஆக உயர்ந்த அவர், அலாவுதீன் கில்ஜிக்காக தென்னிந்திய அரசுகளை வென்றார். அலாவுதீனுக்குப் பிறகு டெல்லி சுல்தானாக அவர் முயன்றதால், அவரும் அவரது உதவியாளர்களும் (அலாவுதீன் இறந்த 36-வது நாளில் பிப்ரவரி-6, 1316) கொலை செய்யப்பட்டனர்.

மாலிக் காபூரிடம் தோற்ற இராமச்சந்திர தேவ், டில்லி சென்ற அலாவுதீன் கில்ஜியின் மேலாண்மையை ஒப்புக்கொண்டார். அலாவுதீன் மகன் கிஸிர் கானுக்கு தேவலதேவியை மண முடிக்கப்பட்டது.

**வாரங்கல் (கி.பி 1309-10):** வாரங்கால்-ஐத் தலைநகராகக் கொண்டிருந்த காகத்திய அரசுக் கெதிராக, தன் அடுத்த படையெடுப்பை மாலிக் காபூர் 1309-ல் மேற்கொண்டார். கடுமையாக எதிர்த்த பின் வேறு வழியின்ற காகத்திய அரசர் இரண்டாம் பிரதாபருத்திரர் அடி பணிந்தார். பெரும் செல்வத்தை கப்பமாகக் கட்டி, அலாவுதீன் மேலாண்மையை அவர் ஒப்புக் கொண்டார்.

**துவார சமுத்திரம் (கி.பி. 1310-11):** ஹொய்சாள அரசர் மூன்றாம் வீரு பள்ளாளர், துவாரசமுத்திரத்தை ஆண்டு கொண்டிருந்தார். அதன் மீது படையெடுக்க மாலிக்காபூர், குவாஜா ஹாஜி ஆகியோர் தலைமையிலான படையை அலாவுதீன் கில்ஜி அனுப்பினார். இத்திடீர்ப் படையெடுப்புபில் வீரப்பள்ளாளர் தோல்வியுற்றார். அதிக தங்கத்தையும் வெள்ளியையும் கொடுத்து அலாவுதீனக்கு அடிபணிவதாக அவர் ஒப்புக் கொண்டார்.

**மதுரை:** வீரபாண்டியர், சுந்தர பாண்டியர் இடையிலான வாரிசுரிமைப் போரால், மாலிக் காபூரின் தாக்குதலுக்கு பாண்டிய அரசான மதுரை இலக்காயிற்று. வாரிசுரிமைப் போரில் தோற்ற சுந்தர பாண்டியர், டில்லி சென்று அலாவுதீனிடம் தன் வழக்கை முறையிட்டார். இதை ஒரு காரணமாகக் கொண்டு பாண்டிய அரசில் புகுந்து மதுரை நகர் மற்றும் பல இடங்களில் உள்ள ஆலயங்களை மாலிக் காபூர் கொள்ளையிட்டார். தப்பி ஓடிய வீரபாண்டியரைப் பிடிக்க இராமேஸ்வரம் வரை காபூர் சென்றார். அங்கு ஒரு மசூதியை அவர் கட்டுவித்தார்.

**மீண்டும் தேவகிரி:** தேவகிரி அரசர் இராமச்சந்திர தேவின் மகன் சங்கர தேவ், டில்லிக்கு ஒழுங்காக கப்பம் செலுத்தவில்லை . அவர் மீது கி.பி. 1312-ல் படையெடுத்து மாலிக் காபூர், அவரை போர்க்களத்தில் கொன்றார். அலாவுதீன் கில்ஜிக்காக தான் மேற்கொண்ட படையெடுப்புகளில் மாலிக் காபூர் பெரும் வெற்றி பெற்றார். அவ்வெற்றிகள் மூலம் அலாவுதீனின் அதிகாரமும் பேரரசின் பெருமையையும் உயர்ந்ததுடன் பெரும் செல்வமும் கிடைத்தது. தன் மேலாண்மையை ஒப்புக் கொண்ட தக்கான அரசுகளை டில்லி சுல்தானியத்துடன் அலாவுதீன் கில்ஜி இணைத்துக் கொள்ளவில்லை.

**மங்கோலியருடன் போர்**

ஜலாலுதின் கில்ஜியின் மரணத்தை (கி.பி. 1296) இந்தியா மீது படையெடுக்க தக்க தருணம் எனக்கருதினார் மங்கோலியத் தலைவர் தாவூத்கான். எனவே 1297 முதல் 1306 வரை

பலமுறை இந்தியா மீது மங்கோலியர் படையெடுத்தனர். 1297-ல் காதர் தலைமையில் நிகழ்ந்த முதல் மங்கோலிப் படையெடுப்பை அலாவுதீனின் தளபதிகளான உலுக்கானும் ஜபார்கானும் இணைத்து முறியடித்தனர். 1299-ல் ஏற்பட்ட இரண்டாவது மங்கோலியப்-படையெடுப்பை ஜபார்கான் முறியடித்தார். பின்னர் குத்லுக் குவாஜா தலைமையில் வந்த மங்கோலியர், சுல்தானியத் தலைநகரை பிறபகுதிகளிடமிருந்து துண்டித்தனர். பிரச்னையை ஜபார்கான் மீண்டும் சமாளித்தார்.

நான்காவது படையெடுப்புக்குப் பின் எல்லைப் புறக்கோட்டைகளையும் காவல் நிலையங்களையும் அலாவுதீன் வலுப்படுத்தினார். எனினும் 1305-லும் மீண்டும் வந்த மங்கோலியரை அலாவுதீனின் தளபதிகள் திறமையாக சமாளித்து, சுல்தானியத்தை காப்பாற்றினார்.

**அலாவுதீன் சீர்திருத்தங்கள்**

அலாவுதீன் சீர்திருத்தங்கள் அவர் புகழை நிலைத்து நிற்கச் செய்தனர். அதை உள்நாட்டுக் கொள்கை என்றும் சிலர் சொல்வர்.

**முடியாட்சிக் கோட்பாடு:** தெய்வீக உரிமைக் கோட்பாட்டில் அலாவுதீன் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். அரசுக் காரியங்கில் உலேமாக்கள் (சமயவாதிகள்) தலையிடுவதை அவர் அனுமதிக்கவில்லை. முப்படைகள், நீதித்துறை, ஆட்சித்துறை ஆகியவற்றிற்கு சுல்தானே தலைவர். அவரே நாட்டின் ஒப்பற்ற ஒரே தலைவர்.

**சுல்தானின் எண்ணமே நாட்டின் சட்டம்**: பிறர் யாரும் அவருக்கு ஆலோசனை மட்டும் சொல்லாம்: நாட்டுக்குத் தேவையானதை சுல்தான் மட்டுமே ஆணையிடலாம்” என்பதே அலாவுதீனின் முடியாட்சிக் கோட்பாடாம்.

**இராணுவச் சீர்திருத்தங்கள்:** தன் முடியாட்சிக் கோட்பாட்டைக் காக்கவும், பல இடங்களை வெல்லவும் மங்கோலியப் படையெடுப்பில் இருந்து நாட்டைக் காக்கவும் சக்தி வாய்ந்த படை தேவைப்பட்டது.

ஃபெரிஷ்டாவின் கூற்றுப்படி, அலாவுதீனின் இராணுவத்தில் 475000/ குதிரை வீரர்கள் இருந்தனர். இராணுவத்தின் திறமையை அதிகரிக்கச் செய்ய அடிக்கடி இராணுவ வீரர்கள். ஆயுதங்கள் மற்றும் குதிரைகள் ஆய்வு செய்யப்பட்டன. அத்துடன் இராணுவ அமைப்பிலும் நிர்வாகத்திலும் பல சீர்திருத்தங்களை அலாவுதீன் புகுத்தினார். அவை: சுல்தானியத் தலைநகரில் நிலையான இராணுவத்தை ஏற்படுத்தினார். அரசுக் கருவூலத்தில் இருந்து நேரடியாக இராணுவ வீரர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டது. சுல்தானுக்காக, சுல்தானால் ஐந்தர்கள் எனப்படும் பாதுகாவலர்கள் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். துருக்கிய மாதிரியிலான எண்ணிக்கை முறையில் இராணுவம் அமைக்கப்பட்டது. போலி இராணுவ வீரர்கள் உருவாவதைத் தடுக்க போர் வீரர்கள் பற்றிய தனிக் குறிப்புகள் தயாரிக்கும் வழக்கம் கொண்டு வரப்பட்டது. ஆய்வுச் சமயத்தில் வேறு குதிரைகளைக் காட்டுவதை நீக்க, போர் வீரரின் குதிரைகளுக்கு சூடு போடும் முறையைக் கொண்டு வந்தார். மொத்தத்தில் இராணுவத்தின் பண்பும் ஒழுங்குணர்வும் உயர்ந்த தரமுடையதாக இருக்கும் வண்ணம் இராணுவ அமைப்பு முறையில் தனிக்கவனம் செலுத்தினார் அலாவுதீன்.

**அங்காடிக் கட்டுப்பாடுகள்:** பெரும் படையைப் பேணவும் இராணுவச் சீர்திருத்தங்களை அமுலாக்கவும் அரசு ஊழியரின் ஊதியத்தை உயர்த்தாமல் இருக்கவும் பொருள்களின் விலையை கட்டுப்படுத்துவதுடன் பல அங்காடிக் கட்டுப்பாடுகளையும் செய்ய வேண்டியது அலாவுதீன் கில்ஜிக்கு அவசியமாக இருந்தது. அதற்காக அத்தியாவசியப் பண்டங்கள் துணி மற்றும் பல முக்கியமான பொருள்களுக்கு அங்காடிகளில் உள்ள விலையை விட குறைந்த விலையை நிர்ணயித்தார்.

விவசாயிகளிடமிருந்து தானியங்களை நேரடியாக வாங்கி குறிப்பிட்ட விலைக்கு விற்க சில வியாபரிகளுக்கு மட்டும் தனி உரிமை வழங்கப்பட்டது. பொருள்களைப் பதுக்குவோர், கருப்புச் சந்தைக்காரர்கள் எடையிலும் அளவிலும் குறைத்து ஏமாற்றுவோர் ஆகியோருக்கு கடுமையான தண்டனைகள் தரப்பட்டன. விளைபொருள்கள் விளையும் இடங்களிலேயே விற்கப்பட வேண்டும்: விலை உயர்ந்த பொருள்களை வாங்கும் முன் பிரபுக்களும் உயர் அதிகாரிகளும் அரசிடமிருந்து முன் அனுமதி பெறவேண்டும் எனப்பட்டது.

இவ்வணிகச் சட்டங்களை அமுல்படுத்த திவானி - ரியாசத் - ஷானி மண்டி என்ற இரு உயர் அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். அடிமைச் சிறுவர்களை கடைக்கு அனுப்பி பொருள்கள் வாங்கி வரச் செய்து விலைகளை சுல்தான் கண்காணித்தார். எடை குறைவாக பொருள்களை விற்கும் கடைக்காரரின் உடம்பிலிருந்து எடையைக் குறைத்துக் கொடுத்த அளவு சதை எடுக்கப்பட்டது.

இக்கட்டுப்பாடுகளால் தானியங்கள், துணிமணிகள், அத்தியாவசியப் பொருள்கள், குதிரைகள், அடிமைகள் ஆகியவற்றின் விலை குறைவாக இருந்தது. வறட்சிக் காலத்திலும் மக்களுக்கு தானியங்கள் கிடைத்தன என பரணி குறிப்பிட்டுள்ளார்.

**பொருளாதார சீர்திருத்தங்கள்:** வருவாய்த் துறையைச் சீரமைத்த முதல் டில்லி சுல்தான் அலாவுதீன் கில்ஜியே. அதற்காக பல பொருளாதாரச் சீர்திருத்தங்களை அவர் கொண்டு வந்தார். மானியங்களாக, நன்கொடையாக மற்றும் பரிசாக தரப்பட்ட நிலங்களை அரசு மீண்டும் எடுத்துக் கொண்டது. இத்தகைய முறையில் நிலம் தருவது நிறுத்தப்பட்டது.

கிராம அதிகாரி, வரி வசூல் செய்வோர் மற்றும் வருவாய் அதிகாரிகளுக்குத் தரப்பட்டிருந்த சலுகைகள் நீக்கப்பட்டன. நிலங்கள் சரியாக அளக்கப்பட்டன. விளைச்சலை அடிப்படையாகக் கொண்டு, விளைச்சலில் 50 சதவீதம் நிலவரியாக விதிக்கப்பட்டது. நிலவரியுடன் வீட்டுவரி, மேய்ச்சல் வரி, ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வரி, போரில் கிடைத்த கொள்ளைப் பொருள்கள் மீது வரி, இந்துக்கள் மீது ஜிஸியா வரி, முஸ்லீம்கள் மீது ஜகாத் வரி ஆகிய வசூலிக்கப்பட்டன. இச்சீர்திருத்தங்களைச் செயலாக்க நேர்மையான அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். இதனால் வருவாய் அதிகரித்து கருவூலம் நிரம்பியது.

நிலையான இராணுவம், கடுமையான சட்டங்கள், சிறந்த அங்காடி நிர்வாகம், விந்தியத்தைக் கடத்தில் ஆகியன செய்த முதல் இந்திய ஆட்சியாளர் இவரே. அலாவுதீன் கில்ஜி இறந்ததும், ஏற்பட்ட வாரிசுரிமைப் போரில் அவரது மகன்களில் ஒருவரான முபாரக் குத்புதீன் முபாரக் என்ற பெயரில் சுல்தான் ஆனார். 1316 முதல் 1320 வரை ஆட்சி செய்த அவரே கடைசி கில்ஜி அரசர். அவரைக் கொன்றுவிட்டு (ஏப்ரல் 15, 1320) நசீருத்தீன் குஸ்ரூஷா என்பவர் டில்லி சுல்தான் ஆனார்.